# ஈழ விடுதலை

வள்ளுவர் ஆண்டு 2008
மாசி 20 2 77
மலர் - 1 இதழ் - 10


# தமிழிளைஞர்கள் விடுதலை !




தோழனே நானும் அங்கு சென்றிருந்தேன், கண்ட காட்சி என்னை துயரத்தில் வீழ்த்தியது. முன்பு போல் கயவர்கள் கைவரிசையை காட்டியதாக நினையாதே கடமை மறந்த இந்த நாய்த்தமிழனை எண்ணியே வெட்கப்பட்டேன். ஐம்பது இலட்சம் தமிழ் மக்கள் வாழும் இலங்கைத் தீவில் கேவலம் இருநூறு மானமுடைய தமிழர்கள் மட்டுமே வந்திருந்தனர். பார்த்தாயா தமிழனை, இவனுக்கா தனி நாடு கேட்கிறோம் என கண்ணீர்மல்க நடந்துவந்தேன் துரையப்பா சாலையின் ஒரு பகுதியில் "தியாகவீரன் சிவகுமாரன் சாலை" என்ற பெயர்ப் பலகையைப் பார்த்து என் கண்ணீரைத்துடைத்துக் கொண்டேன்.

கடல்கடந்த நாட்டில் நீ வாழ்ந்தாலும், உன் தாய் நாட்டையும், உன் உடன் பிறந்த அடிமைத்தமிழர்களையும், நீ மறவாது நினைவில் கொண்டு படும் பாட்டை நான் அறிவேன். அடிமைப் படுத்தப் பட்டு கிடக்கும் உன் தாய்த்திரு நாட்டை எண்ணி நீ விடும் பெருமூச்சு காற்றோடு கலந்து என்னை வந்து தழுவுகிறது.

நாட்டின் நடப்பறிய என் மடலைஎதிர் நோக்கி இருந்து இருப்பாய். இனி தொடர்ந்து உனக்கு எழுதுவேன்,

1974 ஆம் ஆண்டு தமிழுக்கு, நம் தாய்க்கு விழா எடுத்த நாளன்று, நமது உடன் பிறப்புக்கள் ஒன்பது பேர் உயிரைக்குடித்த சிங்கள வெறியர் ஆட்சியின் செயலை நாம் மறக்க இயலுமோ? நமது தங்கத் தம்பிகளுக்கு 1975-76 ஆம் ஆண்டுகளில் நாம் எடுத்த நினைவுச்சின்னத்தை காடையர் ஆட்சி தரைமட்டமாக்கியதை நீ அறிவாய். இவ்வாண்டும் நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டது.



திட்ட மிட்டு தமிழர் நிலத்தை அபகரிக்கும் சிங்களர் ஆட்சியின் முறை கேடானச் செயல் யாழ் நகரிலேயே தலைகாட்டுகிறது. கடந்த 18-1-77 ஆம் நாள் திரு.கென்சு மோகன் வீட்டில் அந்த அயலில் உள்ள ஒரு சிங்களக் குடும்பம் பொலிசாரின் ஒத்துழைப்போடு வீட்டினுள் புகுந்து தன் வயப்படுத்தும் முயற்சியில் முனைந்தனர், அந்த மீறிவந்த அயோக்கியர்களை வீட்டில் இருந்தோர் வெளியேற்றினர். பின் வழக்கம் போல் காவல் நாய்கள்வண்டி நிறைய வந்து ஆர்ப்பாட்டம் செய்து, தங்களை தாக்கியதாக பொய்க் குற்றச்சாட்டின் பேரில் மோகன் சிறைப்படுத்தப்பட்டு பிணையில் வெளிவந்துள்ளார்.

[redacted] சிந்தனைச்சிற்பி சி. கதிரவேற் பிள்ளை பா.உ., திரு. யோகசுவரன், திரு. விசுவநாதன் ஆகியோர் மோகனுக்காக நீதி மன்றத்தில் வாதாட உள்ளார்கள்.

"தமிழ் ஈழ விடுதலை" இயக்கத்தைச் சார்ந்த திரு. முத்துக்குமாரசாமி( திருநெல்வேலி) கடந்தமாதம் விடுதலை செய்யப் பட்டார். அதைத் தொடர்ந்து 1-சுதர்சன், 2-சிவசெயம், 3-சந்திரகுமார், 4-ரஞ்சன், 5-குவேந்திரராசா, 6-இரத்தின பாலா, 7-யோகச்சந்திரன், 8-சிவராசா, 9-செயராசா, 10-வசந்தகுமார், 11-அல்போறசோ மேரி, 12-சிறீஸ்கந்தராசா, தொடர்ந்து கடந்த கிழமை


மூன்றும் பக்கம் பார்க்க..

# விடுதலைக் குரல்

## துரோகச் செயல்

! திருமணமாம் திருமணம் தெருவெல்லாம் திருமணமாம், யாருக்கு?...? நேற்று தன்இனத்தை சேர்ந்திட்ட விடுதலை மறத்திகளின் சேலையைக் களைந்து சித்திரவதை செய்த கடைநிலைத் தமிழன். தமது தாயகத்தின் அடிமைவிலங்கொடிக்க போர்க்களம் புகுந்த புட்பராணியை ஒரு பெண் என்றும் பாராது காட்டு விலங்காண்டிகள் போல் கொடுமை படுத்திய பொலிசு நாய்களின் தலைவன் செயக்குமாரனுக்குத் தான் திருமணம்.

அந்த நாய்த்தமிழனுக்கு பெண் கொடுத்துள்ளான் ஒரு குலத்துரோகி, அம்மட்டோ தன்னைப் போன்ற பெண் ஒருத்தியை அவமானப்படுத்திய கொடுமையினை அறிந்திருந்தும் அவனுடன் கூடிக்குலவுகிறான் கோடாரிக் காம்பினன்.

ஊர்காவற்றுறை பொலிசு இன்சபெக்டராகிய இனத்துரோகி செயக்குமாரனின் மணவிழாவில் வாழ்த்துப்பா பாடுகிறார்[redacted] தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்[redacted], [redacted]வர்[redacted]. வெட்கம், வெட்கம் இதைவிட வெட்கக்கேடு வேறு என்ன இருக்கப்போகிறது.

எமது தாயகவிடுதலைக்கு எதிராக உள்ளவர்களின் சாவு வீடு, திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாது புறக்கணித்து சமுதாயத்திலிருந்து அவர்களை ஒதுக்கி வைக்க வேண்டுமென மேடையேறி முழக்கமிடும் விடுதலைக்கூட்டணியினர்தான் விருந்துண்ண போய் உள்ளனர்.

தலைவர்களே. உங்கள் விடுதலை முழக்கம் உண்மையில் உங்கள் உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து[redacted] தான் வருகிறதா? அல்லது இரு நாக்குக் கொண்டு நீங்கள் இரட்டை வேடம் போடுகின்றீர்களா? சிங்கள ஏகாதிபத்திய வாதிகளின் பொழுது போக்கு மடமாகிய பாராளுமன்ற அடிமைக் கதிரைக்காக தமிழர்களை ஏமாற்றுகிறீர்கள், காட்டிக்கொடுக்காதீர்கள். உண்மையில் நீங்கள் தெளிவு பெறுங்கள், தமிழ்மக்களை குழப்பாது, விடுதலைக்கு போரிட முன் வாருங்கள். இப்படி ஒரு பிரச்சனையை வளர்த்துக் கொண்டே உங்கள் வாழ்க்கையை ஓட்டி முடித்துக் கொள்ளஎண்ணுகிறீர்கள்.

கத்தியின்றி, அரத்தம் இன்றி, காந்திய வழியில் போராடி நாட்டைப் பெறுவோம் என்ற வாய்[redacted] மாலப்பேச்சுக்களை விட்டு, உருப்படியான போராட்டத்தைத் தொடங்குங்கள். மயிலே மயிலே என்றால் இறகு போடாது. அடிக்குஅடி, வெட்டுக்கு வெட்டு, வேட்டுக்கு வேட்டு, பழிக்குப் பழி என நாம் [redacted] போராட்டத்துணியாது வாய்ப் பேச்சு வீரர்களாக[redacted] நாம் இருந்தால், திருட்டுச் சிங்கள அரசுதிட்டமிட்டு தமிழ் மண்ணில் தன் இனத்தைக் குடியேற்றி தமிழீழம் முழுமையும் சிங்களநாடாக்கி விடுவார்கள்.

சிங்கள ஏகாதிபத்திய அரசில் வேட்டைநாய்த் தொழில் செய்யும் செயக்குமாரனே. உமது சேட்டையை விட்டு விட்டு மரியாதையாக வாழ்ந்திடமுனையும். எங்கள் சகோதரிகளுக்கு நீர் செய்யும் இழி செயலை, நாளை விடுதலை மறவர்கள் உன் உடன் பிறந்தாள்களுக்கும், உமது மனைவிக்கும்செய்திடத் தவறமாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளும். பதவி இன்று வரும் நாளை போகும் ஆனால் உன் துரோகச் செயல் உன்னை விட்டுப் போகாது. துரோகிகளின் முடிவு உன்னை நாடுகிறது

## ஒன்றிணைக

அருமைத் தமிழ்நிலம் அயலவர் ஆண்டிட
அடிமை யுற்றிங் சமைந்திடவோ?
பெருமை யுடைகுடி பின்னே யிருந்திட
பீடில் குடிகள் சிறந்திடவோ?
ஒருமை யெலாம்பேசி உருப்படோம் இனியேனும்
உயரும் வழியினை நாடிடுவோம்
விருப்பாய் தமிழரே! விழித்து 'ஈழ
விடுதலை முன்னணியில்' விரைந்திணைக!

நட்ட பயிர்க்கே நலிவைத் தருதலால்
நாமும் களைகளை நீக்குதல்போல்
ஒட்ட நறுக்குவோம் "சிங்களர்" வால்களை
ஓட்டமெடுத்தே யகன்றிடுவர்.
கெட்ட தமிழ்க்குடி கிளைத்திட வேண்டிநீர்
கேளிக்கை விட்டிங்கே வந்திடுவீர்!
விட்ட தனைத்தையும் வென்றிட 'ஈழ
விடுதலை முன்னணியில்' விரைந்திடுக!

கொடுதலை யென்றுமே கொள்ளுக பலவெனும்
கொள்கை யுளங்கொளும் மறவர்களே!
அடுதலை யின்றியே அயலவர் தம்மிடம்
அடைவதொன் றில்லை யறிந்தமையால்
விடுதலை யொன்றே. விடிவினுக் குதவும்
விளைவினைக் காணத் துடித்திடுவார்
சடுதியாய் வந்து சளைக்காது 'ஈழ
விடுதலை முன்னணியில்' தளைந்திடுக!

உற்ற பழியெலாம் ஒழித்தே வுலகினில்
உண்மையை நாட்ட வுழைப்பாரெலாம்
முற்றத் தமிழினம் முகிழ்த்தே நாட்டினில்
முடிவினைக் காணத் துடிப்பாரெலாம்
கற்ற பெருங்கல்வி கலைகள் பெருக்கத்தால்
களக்கும் பொய்மையைக் கடிவாரெலாம்
விற்ற பெருமையை மீட்க 'ஈழ
விடுதலை முன்னணியில்' ஒன்றிணைக!

# தனிநாடு நிறுவப்படும்வரை

# இது செய்தி

"சிற்றாறும் வரப்பெடுத்த வயலும்-ஆறு
 தேக்கிய நல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
 நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின்தோள்கள்
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
 கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்குலத்தைப்
 போயெடுக்க அடக்கிமூச் செவரின் மூச்சு?"
-பாவலேறு பாரதிதாசனார்.

தமிழர்களின் உழைப்பால் இன்று உயர் வாழ்வு வாழும் சிங்கள இனவெறிக் கும்பலுக்கு தமிழர்களின் அரத்தத்தை பருகுவதில் தனி மகிழ்ச்சி. அதுவும் இலங்கையின் ஆட்சிப்பொறுப்பை அரச பரம்பரையினர் போல் பாத்தியம் கொண்டாடும் பண்டார நாயகா குடும்பத்தினர்கள், தமிழர்களின் பச்சை அரத்தம் பருகுவதில் பலே கெட்டிக்காரர்கள்.

ஆட்சி அதிகாரத்துடன், காடையர்களையும் கை ஆட்களாக வைத்துக்கொண்டு, நாட்டுக்குறிய தமிழர்களை, சிங்களவனிடம் ஆட்சியுரிமையை பறி கொடுத்து விட்டு ஏமாந்து நிற்கும் ஏமாளித்தமிழர்களை, "50" இலட்சம் தமிழர்களைஅடிமைகள் போல் நடத்துகிறது பண்டா குடும்பம்.

சிங்கள ஏகாதிபத்திய பாராளுமன்ற கட்டிடத்திற்கு முன்பாக, அறநெறிப் போராட்டம் நடத்திய தமிழர்களை, நாட்டுக்குழைத்த நல்லவர்களை மறந்த பண்டார நாயக்கா (1956) குண்டர்களை ஏவிகொலை செய்யத்தூண்டினார், எவ்வித கருவியும் இன்றி வெறும் கைகளுடன் நின்ற எம்தமிழர்கள் சிந்திய அரத்தத்தை மாடியில் நின்று கண்டு மகிழ்ந்தார். அரத்தத்தில் தோய்ந்த ஆடைகளுடன் குருதி கொப்பளிக்க தேசியப்பேரவையில் பேசிய எமது தமிழர்களைப்பார்த்து நீங்கள் விரும்பியதை எமது மக்கள் அளித்தனர் என அகம்பாவத்துடன் கூறிய அதே பண்டார நாயக்கா வைத்தான் சிங்களவன் துப்பாக்கிக் குண்டால் துடிதுடிக்க சாகடித்தான்.

கணவனுக்குப்பின் ஆட்சிப்பொறுப்பேற்ற கைம்பெண் சிறிமாவோ (1974) யாழ் நகரில் தமிழுக்கு விழாவெடுத்த தமிழர்களை, தன் தாய் மொழிக்கு கடன் செய்த தங்கத் தமிழ்த் தம்பிகளை, பால்மணம் மாறு பள்ளி மாணவர்களை, பாராண்டதமிழனின்வழித் தோன்றல்களை, ஒன்பதின்மரின் உயிரைப்பறித்திட காரணமாய் இருந்தார். இதற்கு அம்மையாருக்கு உடந்தையாக இருந்த துரோகி துரையப்பாவின்கெதி அம்மையாருக்கு வராமலா போகும்.

"அவரை விதைத்தால் துவரையா விளையும்" என்பது முதுமொழி, போலி அரச குடும்பத்தைச் சார்ந்த காலஞ்சென்ற பண்டார நாயக்காவின்உடன் பிறந்தாள் (ஒன்பது தமிழர்களின் உயிரைப்பறித்தஅதே) சனவரி பத்தாம் நாள், 27 ஆண்டு காலமாக நாடோடி வாழ்வு வாழ்ந்த ரீட்டாபண்டாரநாய்க்கா அனாதையாக, கேட்பாரற்ற பிணமாகக்கிடந்தாள். இலங்கையின் போலி அரசகுடும்பத்தின் கயவாளித் தனத்துக்கு, ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்து, அகந்தை உடையோருக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்திட்டு மறைந்துள்ளாள்.

# இதயங்கள் அழுகின்றன !!



தமிழ் கூறும் நல்லுலகம் ஒரு சிறந்த தலைவரை இழந்தது, சட்ட உலகம் ஒரு சிறந்த நிபுணரை இழந்தது, தமிழ் நிலம் ஏழையாகி விட்டது.

மனித உரிமைக்காக வீரமிக்கப் போர்புரிந்த ஓர் மாவீரரை இழந்துவிட்டோம். தமிழர்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

நீ வடித்த கோடுகள் எம் வரலாற்றின் வரையறைகள்.

நீ உதிர்த்த வாதங்கள் எம் வாழ்வியலின் மதிர்சுவர்கள்.

தனது சட்ட நுட்ப அறிவால் புகழ்க் கொடி நாட்டிய தமிழர் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் மறைவு கேட்டு மீளாத் துயர் உற்றோம்.

அவரது குடும்பத்தினருக்கு இங்கிலாந்தில் வாழும் தமிழர்களின் சார்பில் "ஈழ விடுதலை முன்னணி" தனது இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

---

முதலாம் பக்கத் தொடர்ச்சி..........

நான்காண்டுகளாக சிறையில் வாடிய சத்தியசீலன் திசைவீரசிங்கம், நடேசானந்தன், மூவரும் விடுதலை செய்யப்பட்டனர், தொடர்ந்து கவிஞர் காசிஆனந்தன், ஆனந்தக்குமார், சிவராசா, பரமேசுவரன், சதானந்தசிவம், இரத்தினகுமார், தனபாலசிங்கம். வண்ணைஆனந்தன், பூபதிபாலவடிவேற்கரசன், புட்பராசா ஆகியோர் விடுதலை செய்யப் பட்டனர்.

விடுதலையான இளைஞர்களில் பெரும்பாலானோர் தான் உண்டு தன் வேலை உண்டு என்ற எண்ணம் மேலிட்டோராய் காணப்படுகின்றனர். காரணம் அவர்கள் மறியலில் இருந்தபோது அவர்களை நம்பியிருந்த குடும்பங்கள் வாழ வழியின்றி பட்ட பாட்டினையென்றுகின்றார்கள். வளரும்

உன்னோடு ஈழத்தில் பிறந்தவன்.

# தமிழினம் ஓயாது

# ஞானபோதகம்

"கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்பதினாலோ, என்னவோ இலண்டனில் ஆளுக்கொரு கோயில் கட்டிட புகழ் பெற்ற இரண்டு வணிகர்கள் முயன்று கொண்டுள்ளார்கள். பல ஆண்டு காலமாக கோயில் இல்லா இலண்டனில் குடியிருந்து வந்த இப்பெரிய மனிதர்களுக்கு ஏன் காலம் போன கடைசியில் இந்த ஏமாற்று வேலை. ஒருவர் தோல் வணிகர் பிறிதொருவர் சட்ட(தமிழ்) வணிகர். சென்னையில் உள்ள ஆட்டுத் தோல் நிர்வனத்தின் இலண்டன் அலுவலக பொறுப்பாளர் "தோல் வணிகர்".

இவர் கைதேர்ந்த பித்தலாட்டக்காரர், ஒழுக்கமில்லா இவரிடம் கடவுள் எப்படி கனவில் தோன்றினார் என்பது புரியாதபுதிர். பிற்போக்குவாதிகளும், தமிழன் என்ற போர்வையில் மறைந்து கொண்டுள்ள தமிழினத்துரோகிகளும், தமிழனை காட்டிக் கொடுக்கும் கயவர்களும் நிரம்பிய "இலண்டன் தமிழ்ச் சங்கத்தின்" முன்னாளைய தலைவர், இன்னாளைய புரவலர்.

இலண்டனில் மாபெரும் சங்கம் என வெளி நாடுகளிலிருந்து வரும் தமிழர்களுக்கு படம் பிடித்துக் காட்டி தனக்கு ஆகவேண்டியவைகளை சாதித்துக் கொண்டவர். குறிப்பாக இந்திய அரசின் அன்னியச் செலவாணி கட்டுப்பாட்டினால் தமிழ்நாட்டில் உருபாய் வாங்கிக் கொண்டு இங்கு வருபவர்களுக்கு பவுண்ட் கொடுக்கும் கறுப்புச் சந்தை வணிகத்தை நடத்தியவர் இந்த நாட்டுக் கோட்டையார். இவ்வகையில் பிரபலமான இவ்வணிகர் தமிழ்நாட்டில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களை காக்காய்பிடித்து காரியம் சாதிப்பதில் வல்லவர்.

சென்னையில் உள்ள தோல்வணிக நிர்வனம் தனது இலண்டன் கிளைக்கு மூடுவிழா போட்டது தோல்வணிகருக்கு வேலைபோய்விட்டது. இங்கு வேறு வேலை தேடுவது சிரமம் இல்லைதான் ஆனால் தோல் வணிகர் சிந்தித்தார்.

முன்னேற்றம் அடைந்த இங்கிலாந்தில் குடியேறிவிட்டால் தமிழர்கள் அறிவில் முன்னேற்றம் அடைந்திடவில்லை, மூடப்பழக்க வழக்கங்கள் நிறம்பிய முண்டங்களாகத்தான் இந்த மானங்கெட்டத் தமிழர்கள் இருக்கிறார்கள் என்பதை நன்குணர்ந்தவர் வணிகர். இவர்களிடம் சமுதாய சீர்திருத்தம் பற்றியோ, தமிழர்விடுதலை பற்றியோ, தமிழ் மொழி வளர்ச்சி பற்றியோ பேசிப் பயனில்லையென்பதைக் கண்டவர் நாடோடித்தமிழனை ஏமாற்ற நல்லவழியைக் கண்டார். கண்மூடிப்பழக்கங்கள் மண்மூடிப்போக வேண்டும் என்றார் "வள்ளலார்". அவர் வழியில் ஐம்பது ஆண்டு காலமாக இடைவிடாது தன் மான இயக்கங்கள் பிரச்சாரம் செய்தும், தமிழனை நாலாம் சாதி எனக்கூறும் "இந்து" மதம்தான் எங்கள் மதம் எனக்கூறிக் கொள்ளும், சூடு சுரணையற்ற தமிழர்களை, பண்டிமலைகளும், காஞ்சி காமகோடிகளும், சாயிபாபாக்களும், இரத்தினகிரிகளும், வாரிகளும் ஏமாற்றிப் பிழைக்கும் வழியினை நமது தோல் வணிகரும் மேற் கொண்டார்.

தமிழ் மலையாம் மறைமலைஅடிகளாரின் குடும்பத்தைச் சார்ந்தவன் எனக்கூறிக் கொள்ளும் ஒரு பொம்மையையும், தமிழ்நாட்டு விடுதலையே என் குறி எனக்கூறிக்கொண்ட ஒரு இழிந்த இதழையும் பக்கபலமாக வைத்துக் கொண்டு, தோல்வணிகர் கடவுளின் வாரிசாகி ஊரார் காசில் உலகம் சுற்றி வருகிறார். இவர் ஒருமணி நேர பூசைக்கு "3000" உருபாய் செலவிடுவதாக கொழும்பில் செய்தித்தாளுக்கு செய்தி கொடுத்துள்ளார். எங்கு பூசை செய்கிறார் அவர் உறுப்பினராய் இருக்கும் கனியாட்ட அரங்கில் தனக்கு ஆகும் செலவையும் சேர்த்துச் சொல்லுகிறாரா? ஏமாந்த தமிழர்கள் இருக்கும் போது, தோல் வணிகன் போன்ற ஏமாற்றுக்காரர்கள் இருக்கத்தானே செய்வார்கள்.

## சட்ட(தமிழ்)வணிகர்.

பொய்மட்டுமே சொல்லி பிழைக்கும் வழக்குரைஞர் தொழில் செய்தவர், இலாபநோக்கின்றி இதழ் நடத்தும் பெரும் தொண்டர், தமிழை விற்கும் எமகன்டர், வழக்குரைஞர் தொழிலை திறம்பட நடத்தத்தெரியாதவர், கறுப்புக் கோட்டுப் போட்டு வழக்கு மன்றத்தில் பொய்யையும் புரட்டையும் சொல்வதைவிட காவி அணிந்து கடவுளின் பெயரால் பித்தலாட்டங்கள் செய்வது இலாபமுடையது என்பதை அனுபவபூர்வமாய் அறிந்தவர், அதனால் கறுப்பைக்களைந்து காவி புனைந்தவர். எங்கள் கோயிலில் தமிழில் பூசை செய்கிறோம் என்க்கூறிக் கொள்ளும் குள்ள நரியார்.

இவருடன் ஒத்துப் போனால் வானளவாக புகழ்ந்து துதிபாடுவதில் நல்ல தாசர். சிறிது மாறுபட்டால்அவர் இதழில் இருட்டடிப்பு செய்வதில் சின்ன புத்தியுடையவர் காலத்திற்கு ஏற்ற கோலம் போடுவதில் கெட்டிக்காரர், விடுதலை வீரர்கள் வந்தால், தானும் விடுதலை விரும்பி போல் நடிப்பார். அவர்கள் போனபின் தன் தாய் நாட்டில்(ஈழத்தில்) உள்ள சொத்துகளுக்கு அரசு மோசம் செய்யுமோ எனப்பயந்து தூதர் மெண்டிசு போன்றவர்களை அழைத்து சாமியின் பெயரால் சதிராடும் சதிகாரர்.

சைவம் தழைக்கப்பாடு, படுவதாகக் கூறும் இவர் நாய் விற்ற காசு குலைக்கவா போகிறது என எண்ணி சைவத்தையும், தமிழையும் அழிக்கின்ற கொள்கையுடைய "பாரத விலாசம்" போன்ற படங்களைப் போட்டு பணத்தைத் திரட்டும் பக்காத் திருடர்

தோல்வணிகருக்கும், சட்ட(தமிழ்)வணிகருக்கும்ஒன்று கூறிக்கொள்கின்றோம்-தமிழனைஏமாற்றிப் பிழைக்கும் தொழிலை விட்டு விட்டு, வாழக்கற்றுக் கொள்ளுங்கள். தமிழனுக்கு நாடு இல்லை, அவனுக்கெனஒரு அரசுஇல்லை உலகமெல்லாம் அவன் படும் இன்னல்களை போக்கிட உங்கள் கடவுள் எவரும் முன் வரவில்லை. இப்படியிருக்க ஏனய்யா உங்கள் புளுகுப் புராணங்களை இங்கும்அவிழ்த்துக் கொட்டுகின்றீர்கள். தமிழனை வாழவிடுங்கள்..

இலண்டன் வாழ் தமிழர்களே ஏமாற்றும் இந்த எத்தர்கள் கூட்டத்திடம் எச்சரிக்கையாக இருங்கள். கடவுளின் பெயரால் காசு பறிக்கும் இக்கயவர்களுக்கு நல்லறிவு புகட்டுவது உங்கள் கடமை.

---

உலகின் பலபாகங்களிலும் சிதறி, தம் மொழி பண்பாடு இழந்து, பொதுத் தொடர்பு துண்டிக்கப் பட்டுத் தமக்கென ஒரு தமிழரசு இல்லாமையால் தமது தனித்துவத்தைக் கூட காப்பாற்றிக் கொள்ள முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் தமிழர்களை ஒருங்கிணைக்கக் குரல் கொடுக்கும் "உலகத் தமிழர் குரல்" என்ற மாத இதழைப் பெற தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி—

ஆசிரியர்: குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்
(49, Colombo Street, KANDY, CEYLON.)

---

ஈழவிடுதலை முன்னணியினரால் 35, PRIOLO ROAD, LONDON S.E. 7 ல்.
அச்சிட்டு வெளியிடப்படுகிறது.